# மனிதநேய வகைகூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP இன் நியமங்கள்

Humanitarian Accountability Partnership

# மனிதநேய வகைகூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்கள்

HAP அமைப்பினால்

30 ஜனவரி 2007 இல் அங்கீகரிக்கப்பட்டது

மனிதநேய வகைகூறுதலுக்கான கூட்டிணைவு-சர்வதேசம்

---

“மனிதநேய செயற்பாடுகளை பயனாளிகளுக்கு வகைகூறுடையதாக்கல்”

**தயாரிப்பு:**
HAP ஆசிரிய பீட செயலமர்வுக் குழு

**ஆலோசனை:**
HAP நியம அபிவிருத்தி தொடர்பிலான குழு
பயனாளிகளின் பிரதிநிதிகள்
கோபன்ஹெகன் முறைப்பாட்டுப் பொறிமுறை பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றியோர்
டாக்கா மற்றும் நைரோபி பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றியோர்கள்
களப் பரிசோதனைகளில் பங்குபற்றியோர்கள் (செனெகல், சோமாலியா மற்றும் இலங்கை)

**© HAP International**
Maison Internationale de l’Environment 2 Chemin Balexert 7
CH-1219 Chatelaine
Geneva
Switzerland

தொலைபேசி இல: +41 22 788 1641
மின்னஞ்சல்: secretariat@hapinternational.org
இணையத்தளம்: http://www.hapinternational.org/

லுதரன் வேர்ல்ட் ரிலீப்பின் (Lutheran World Relief) அனுசரனையுடன் வெளியிடப்பட்டது.
ஆகஸ்ட் 2009

# மனிதநேய வகைகூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்கள்

## பொருளடக்கம்


முன்னுரை

1. அறிமுகம்

2. மனிதநேய வகைகூறுதலின் உடன்படிக்கை

3. HAP 2007 நியமத்திற்கான அளவு மட்டக்குறிகள்

# முன்னுரை

தனிப்பட்ட வகையில் நன்றி தெரிவிக்கவியலாத பெருமளவிலான அனர்த்த இடர்களிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள், உதவிப் பணியாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் ஈடுபாட்டுடன் ஆறு வருடங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் அதிகளவிலான ஆலோசனைகளின் பின்னர், தற்போது மனிதநேய பொறுப்புக் கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP-2007 இன் நியமம் இறுதியான வடிவம் பெற்றுள்ளது.

இவையனைத்துக்கும் மேலாக, இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாக இச்செயல் திட்டத்திற்காக தங்களது நேரம், சக்தி மற்றும் அறிவு என்பவற்றைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் செயற்திட்டத்தை முன்னின்று வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்கு மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரந்ததோர் அறிவுக்கடல் மற்றும் அனுபவங்களிலிருந்து வடித்தெடுக்கப்பட்டு இச்செயன்முறைக்கு ஊட்டமளித்த அவசியமான அறிவுரைகளை பின்வரும் சொற்களில் சுருக்கமாகக் கூறலாம்: எளிமையாக் வழங்கக்கூடியதாகவும் மற்றும் பயனுறுதியாகவும் உள்ளமையாகும். இவையனைத்துக்கும் மேலாக தர முகாமைத்துவம் என்பது ஒரு புதிய மதம் அல்ல என்பதையும் ஞாபகத்தில் கொள்ளுதல் வேண்டும். இது மனிதநேயப் பணிகளின் பொறுப்புக் கூறுதல் மற்றும் பயனுறுதித்தன்மை என்பவற்றில் நடைமுறை ரீதியான வழிகள் மூலம் தொடர்ச்சியான மேம்படுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு செய்முறையாகும்.

இப்பொழுது, HAP *2007* நியமங்களுடனான இணக்கப்பாட்டை அடைவதற்கு மனிதநேயப் பணிப் பங்காளர்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்களால் இது பின்பற்றப்படுதலை மேம்படுத்துவதன் மூலம் அனைத்து மனிதநேய ஸ்தாபனங்களும் இந்த முக்கிய இலட்சியத்துக்கான தங்களது பற்றுறுதியை வெளிக்காட்ட முடியும். இதனொரு பயனாக, அனர்த்த இடர்களிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் நன்னிலை மற்றும் கௌரவம் என்பன மேம்படும். மனிதநேய சமூகத்திற்கு இந்த நியமத்தைப் பற்றி பாராட்டுவதற்கு நிச்சயமாக இதைவிட முக்கியமானதாக எதனையும் கூறமுடியாது.

HAP *2007* நியமம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மனிதநேய முகவரமைப்புகளின் அளவு, தோற்றம் என்பவற்றுடன் அவை நேரடியாக அல்லது பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுகிறார்கள் என்பவற்றை கவனத்தில் கொள்ளாது, தங்களின் மனிதநேயத்திற்கான தரமான முகாமைத்துவ முறைகள் கிரமமாக அங்கீகாரத்தை அடைவதற்கு பற்றுறுதி கொண்ட அனைத்து அமைப்புகளுக்கும் வாய்ப்பை வழங்குவதற்காக HAP சான்றிதழ் திட்டத்தை நாம் இப்பொழுது ஆரம்பிக்கின்றோம்.

இந்த உணர்வுபூர்வமான அபிவிருத்தியில் பங்குபற்றுமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

டெனிஸ் கெய்லொக்ஸ்
தலைவர்-HAP சர்வதேசம்
செயலாளர் நாயகம் - கெயார் சர்வதேசம்

ஜெனீவா
5 ஜனவரி 2007

# 1. அறிமுகம்

## 1.1 தத்துவங்களிலிருந்து நியமத்திற்கு

உயிர்களைக் காப்பாற்றுதல் மற்றும் துன்பப்படுதலை தணிப்பதிலான பணியில் கணிசமான நிதி, தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கு ஏற்பாடு என்பவற்றுக்கான சக்தியை மனிதநேய நிறுவனங்கள் அனுபவிக்கின்றன. இதற்கு மாறாக, அனர்த்த இடர்களிலிருந்து தப்பியோர்களுக்கு நிவாரண முகவரமைப்புகள் மீது முறையான கட்டுப்பாடுகள் இல்லாததுடன் அநேகமாக குறைந்தளவான செல்வாக்கையே கொண்டுள்ள இந்நிலையானது, அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் இந்த முகவரமைப்புகளை பொறுப்புக் கூறவைப்பதைக் கடினமாக்குகிறது. 2003 இல், அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களுக்கு வகை

கூறும் பொறுப்பை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அந்த நிறுவனங்கள் HAP வகை கூறும் தத்துவங்களுடன் இணக்கப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்குமாக மனிதநேய வகை கூறுவதற்கான கூட்டிணைப்பு "HAP" ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் தத்துவங்களைப் பிரயோகிப்பதன் மூலம் நிறுவனமொன்று அதன் மனிதநேயப் பணிகளின் தரம் குறித்து அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களுக்கு தான் வகைகூறுதற்காக தன்னை ஏற்படுத்திக் கொள்கிறது.

### வகை கூறுதலுக்கான தத்துவங்கள்

1) மனித நேய நியமங்கள் மற்றும் உரிமைகளுக்கான பற்றுருதி
- பயனாளிகளின் மனிதநேய நியமங்கள் மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளித்தல் பாதுகாத்தல் என்பனவற்றுக்கான பற்றுருதியை அங்கத்தவர்கள் வழங்குவார்கள்.

2) நியமங்களை உருவாக்குதல் மற்றும் இயலளவு அபிவிருத்தி
- பங்கேற்பவர்களின் பொறுப்பு கூறுதலுக்கான செயற்பாட்டு கட்டமைப்பை* (Frame Work) அக்கறை கொண்டவர்கள் உருவாக்குதல்,
- அங்கத்தவர்கள் நியமங்கள் மற்றும் செயற்பாட்டு குறிகாட்டிகளை வடிவமைத்து அவற்றின் தரத்தை கிரமமாக பரிசிலித்து அவசியமாயின் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- நியமங்களை பயன்படுத்தல் நடைமுறைபடுத்தல் என்பனவற்றுக்கு பொறுத்தமான பயிற்சியை அங்கத்தவர்கள் வழங்குவார்கள்.

3) தொடர்பாடல்
- பின்பற்றப்படும் நியமங்கள், மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் அக்கறை கொள்ளும் விடயங்களை தீர்த்து வைப்பதற்கு தேவையான வழிமுறைகள் என்பனவற்றை அக்கறை உடைய தரப்பினருடனும் முக்கியமாக பயனாளிகளுடனும் காரியாலய அதிகாரிகளினுடனும் கலந்துரையாடுதல்.

4) நிகழ்ச்சித்திட்டங்களின் பங்கேற்றல்
- செயற்திட்டங்களை திட்டமிடல் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல். என்பனவற்றில் பயனாளிகளை ஈடுபடுத்துவதுடன் திட்ட செயற்பாடு சம்பந்தமாகவும் நடைமுறைப்படுத்தலில் பாரதூரமான தடைகள் இருப்பின் அவற்றையும் அவர்களுக்கு தெரியப்படுத்துவார்கள்.

5) இணக்கப்பாடுகளை கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்
- நியமங்களுடனான கண்காணிப்பதிலும் மறுசீரமைப்பதிலும் பயனாளிகளையும் காரியாலய உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்துவார்கள்.
- நியமங்களுடனான இணக்கப்பாடுகளை சிறப்பான வழிமுறையில் பயன்படுத்தி கிரமமாக

கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

- பலதரப்பட்ட படிவங்களை பயன்படுத்தி நியமங்களில் காணப்பட்ட இணக்கப்பாடுளை ஆகக் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது பயனாளிகளுக்கும், அக்கறை உடைய தரப்பினருக்கும் அங்கத்தவர்கள் அறிவிப்பார்கள்.

6) முறைப்பாடுகளை தீர்த்து வைத்தல்

- பயனாளிகளும் காரியாலய உத்தியோகத்தர்களும் தமது குறைபாடுகளை முறையிடுவதற்கும் பாதுகாப்பான வகையில் தீர்த்து கொள்வதற்க்கும் அங்கத்தவர்கள் வழி வகைகளை மேற்கொள்ளல்.

7) நடைமுறைப்படுத்தும் பங்காளிகள்

- இக் கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு தேவையான நேரத்தில் அமுல் படுத்துவதற்க்கு அங்கத்தவர்கள் பற்றுருதியுடையவர்களாவார்கள்.

* வகை கூறுதலுக்கான செயற்பாட்டு கட்டமைப்பு (Frame Work) என்பது நியமங்கள் தரத்தன்மை கோற்பாடுகள், கொள்கைகள், வழிகாட்டிகள் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளாகும். செயற்பாட்டு வரையறையானது அளவிடக்கூடிய செயற்பாட்டு குறிக்காட்டிகளை கட்டாயமாக கொண்டிருக்க வேண்டும். நியமங்கள் நிறுவனத்திற்கு உள்ளார்த்தமானவையாகவோ அல்லது கூட்டு முயற்ச்சிகளாகவோ இருக்கலாம். உதாரணம் :Sphere/ People in Aid

எவ்வாறாயினும், வகை கூறும் தத்துவங்கள் செயற்பாட்டுத் தரத்திற்கான அளவு மட்டங்கள் அல்லது மாறும் தன்மை கொண்ட இணக்கப்பாட்டுக் குறிக்காட்டிகளை உள்ளடக்கவில்லை. “மனிதநேய நியமங்கள்” மற்றும் “பயனாளிகளின் உரிமைகள்" தத்துவம் 1ல் விளக்கமாகத் தெரிவிக்கப்படவில்லை. இதன் பயனாக, வகை கூறுவதற்கான தத்துவம், முகவரமைப்பொன்றின் மனிதநேய பொறுப்புக்கூறல் மற்றும் தர முகாமைத்துவத்தினை கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்தல்களுக்கு முரண்பாடற்ற, தெளிவான அணுகுமுறை ஒன்றுக்கேதுவாக போதுமான அடிப்படையொன்றை வழங்கவில்லை. ஆகையால், மனிதநேய வகை கூறும் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP நியமங்களை உருவாக்குவது அவசியமாகிறது.

HAP இன் பொறுப்புக் கூறும் கோட்பாடுகளைப் போலவே, மனிதநேய வகைப்பொறுப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான HAP 2007 நியமம் விரிவான கலந்தாலோசனைகள் மற்றும் களப் பரிசோதனைகளினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அது அனைத்து மனிதநேய முகவரமைப்புகளினாலும் பிரயோகிக்கக்கூடிய எளிமையான ஆனால் பயனுறுதி கொண்ட மனிதநேயமுகாமைத்துவ முறையை அடிப்படையாகக் கொண்டது. அவை மனிதநேயப் பணிகளை மேற்கொள்வோரின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதும், வடிவமைப்பதுமான ஒரு தொகுதி மனிதநேயக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டதுடன், இதன் மூலம் அவை தன்னியல்பாகவே வகை கூறுவதாக அமைகின்றன. HAP 2007 நியமங்கள், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வகை கூற உள்ளதாக இருக்கும் ஈடுபாட்டுடன் கூடியதானதொரு ஒப்பந்தத்தை தனியே இப்பொழுது மட்டுமன்றி, எதிர்காலத்துக்கும் கூட பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த விழுமியங்கள் HAP மனிதநேய பொறுப்புக் கூறும் உடன்படிக்கையில்[1] சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

---

[1] ‘உடன்படிக்கை’ என்பது பிணைக்கும் தன்மையுடனான பற்றுறுதியை குறித்துக் காட்டுவதற்காக இங்கே பயன்படுத்தப்பட்ட சொல்லாகும்.

## 1.2 தத்துவங்களை நடைமுறைப்படுத்தல்

மனிதநேய செயற்பாடுகள் நடைபெறும் சூழ்நிலைகள் சிக்கலானது, கடினமானது என்பதுடன் சிலசமயங்களில் எதிர்ப்பும் கொண்டதாகவும் அமைகிறது. மனிதநேய சமூகத்திடமுள்ள மனித மற்றும் நிதி வளங்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் அதன் பணிகளுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. நடைமுறையில் மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்கள் அடிக்கடி கூடாதது மற்றும் மோசமானது என்பவற்றுக்கிடையிலான ஒரு கடினமான தெரிவு செய்தலுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மனிதநேய செயற்பாடுகளில் மிக உயர்ந்த நியமங்களைப் பேண வேண்டுமென்கின்ற அவர்களது அபிலாசைகள் அவர்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட இடையூறுகளால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்றப்பட முடியாமல் உள்ளது. எவ்வாறாயினும், தகுந்த பதில் நடவடிக்கை சாத்தியமல்லாத நிலைமைகளிலும் கூட வேதனை மற்றும் இன்னல்களுடன் வாழ்பவர்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் உணர்வு சார்ந்த கடப்பாட்டிற்கமைய செயற்படுவதே மனிதநேயமென்பதின் சாரமாகும். உதாரணமாக, பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட ஒருவரை இரக்கத்தோடு கட்டியணைக்கும் அயலவரின் செயலானது மனிதநேயத்தின் அடிப்படையில், “மனிதநேயப் பணி நிபுணர்களால்" மேற்கொள்ளப்படும் ஒரு பெரும் சர்வதேச நிவாரணப் பணிகளின் அதே மதிப்பையே கொண்டுள்ளது. பல சந்தர்ப்பங்களில், மிகச் சிறந்ததாக இருக்கக்கூடிய மனிதநேய நடவடிக்கைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாதவையாக இருக்கலாம், ஆயினும் அவை பயனுள்ளவையாகவே தொடர்ந்துமிருக்கும்.

எவ்வாறாயினும், HAP சான்று பெற்ற முகவரமைப்பொன்று வகை கூறும் தத்துவத்தின் முழுமையான இணக்கப்பாட்டை அடைய முடியாவிட்டால், அதற்கான விளக்கமொன்றினை அளிக்க வேண்டும். மனிதநேய வகை கூறும் உடன்படிக்கை என்பது கடுமையான தெரிவுகளை எதிர்கொள்ளும் மனிதநேய நிறுவனங்களுக்கு வழிகாட்டலை வழங்குவதற்கு வடிவமைக்கப் பட்டதொரு நடைமுறை ரீதியிலான கருவி முறையாகும். அது ஜீன் பிக்டெட்ஸின் (Jean Pictet) மனிதநேயக் கோட்பாடுகளின் உருவாக்கத்தைப் போன்றதல்லாததாக இருப்பினும் அதற்கு அண்மித்ததாகவுள்ளது. ஒவ்வொரு தத்துவமும் அதன் ஒப்பீட்டு ரீதியிலான முக்கியத்துவத்தின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, மனிதநேயம் மற்றும் பக்கச்சார்பற்ற <u>ஆரம்பநிலைக் தத்துவங்களுடன்</u> ஆரம்பித்து விளக்கமான ஒப்புதல், பராமரிப்புக் கடமை மற்றும் சான்றாக இருத்தலெனும் இரண்டாம்நிலைக் <u>தத்துவங்களை</u> அடுத்ததாகக் கொண்டு, சுயாதீனமான தன்மை, வெளிப்படையான தன்மை, நடுநிலைமை, இணைந்து செயற்படல் எனும் <u>மூன்றாம்நிலைக் தத்துவங்களுடன்</u> முடிவடைகிறது.

சில சந்தர்ப்பங்களில், நிறுவனமொன்று ஒரு தத்துவத்துடன் இணங்குவதன் உடனடி விளைவாக மற்றொரு தத்துவத்துடன் இணங்கிக் கொள்ள முடியாதிருக்கும் நிலை ஏற்படும். உதாரணமாக ஒரு நிவாரண விநியோகத் திட்டம் தொடர்பான பிரசுரம், திட்டத்தின் பயனாளிகள் மற்றும் முகவரமைப்பின் ஊழியர்களை பெரும் ஆபத்துக்குட்படுத்துவதாக அமையலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தை தகவல்களை வெளிப்படுத்தாதிருக்கும் கொள்கை மூலம் நியாயப்படுத்த முடியும். இவ்வித நிகழ்வுகளில், HAP - சான்று பெற்ற முகவரமைப்பு அத்தகைய சந்தர்ப்பங்களில் ஓர் உயர் மட்டத்திலுள்ள தத்துவத்துடன்

இணக்கம் காண்பதற்காக தவிர்க்க முடியாத நிலைமைகளின் கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தத்துவங்களை மீறிச் செயற்படுவதற்கு தெரிவு செய்ய வேண்டியிருந்ததென விளக்கமளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இவ்விதம் செய்வதன் மூலம், குறித்த முகவரமைப்பு தான் நல்லெண்ணத்துடனும் குறித்த நிலைமையின் கீழ் HAP 2007 நியமங்களுக்கமைவாக நடந்து கொண்டதையும் எடுத்துக்காட்டும்.

மனிதநேய வகை கூறுதல் உடன்படிக்கை, HAP சான்று பெற்ற முகவரமைப்புகள் அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்கள், பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் மற்றும் ஏனைய பங்கேற்போர்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருக்கக் கூடிய ஏதேனும் மேலதிக நலன்கள் அல்லது கொள்கைகளை வெளியிடுவதற்கும் வேண்டுகிறது.

## 1.3 சான்றளிப்பதற்கான தகுதிகாண் விதிமுறைகள்

HAP 2007 நியமங்களின் கீழ் சான்றிதழ் பெறும் வாய்ப்பு கீழ் விபரிக்கப்பட்டதகுதி காண் விதிமுறைகளைத் திருப்தி செய்யும் ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**HAP சான்றிதழுக்கான தகுதிகாண் விதிமுறைகள்**

1. பக்கச்சார்பற்ற அடிப்படையில் மனிதநேய உதவிகளை வழங்குவதற்கு பற்றுறுதி கொண்டிருத்தல்.
2. சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட்ட நாடு அல்லது நாடுகளிலும் மற்றும் அது மனிதநேயப் பணிகளை முன்னெடுக்கும் இடங்களிலும் ஒரு இலாப நோக்கற்ற ஸ்தாபனமாக முறைப்படி பிரகடனப்படுத்தப்பட்டிருத்தல்.
3. சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட்ட நாடு அல்லது நாடுகளிலும் மற்றும் அது மனிதநேயப் பணிகளை முன்னெடுக்கும் இடங்களில் சட்டத்தின் கீழ் நிதி ரீதியான பொறுப்புக் கூறுவதின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்
4. அதன் மனிதநேய பொறுப்புக் கூறுதல் கட்டமைப்புப் பற்றி பகிரங்க அறிக்கையிடல்.

## 1.4 முக்கியமான வரைவிலக்கணங்கள்

HAP 2007- நியமம், வகைகூறுதல் மற்றும் தரம் பற்றிய பல குறிப்பிடுதல்களைக் கொண்டிருப்பதால் மனிதநேய பொறுப்புக் கூறும் கட்டமைப்பு மற்றும் மனிதநேய தர முகாமைத்துவ முறை தொடர்பிலான சொற்றொடர்கள் மற்றும் எண்ணக்கருக்கள் கீழே வரையறுக்கப்பட்டுள்ளன.

### முக்கியமான வரைவிலக்கணங்கள்

**வகை கூறுதல்**
வகை கூறுதல் என்பது, அதிகாரம், பொறுப்புணர்வுடன் பயன்படுத்தப்படுவதைக் கருதுகிறது. மனிதநேய வகை கூறுதல் அனர்த்தத்தில் தப்பியவர்களுக்கு பொறுப்புக் கூறுகின்றதை கவனத்தில் கொள்வதுடன் சம்பந்தப்படுகிறது.

**மனிதநேய வகை கூறுதலுக்கான கட்டமைப்பு**
மனிதநேய வகை கூறுதலுக்கான கட்டமைப்பென்பது, ஒரு நிறுவனம் அதன் அக்கறை உடைய தரப்பினர்களுக்கு எவ்விதம் வகை கூறுதலை உறுதிப்படுத்தும் என்பதைக் குறிப்பிடும் ஒரு தொகுதி வரைவிலக்கணங்கள், படிமுறைகள் மற்றும் நியமங்கள் என்பவையாகும். அது, கடப்பாடுகளின் ஒரு கூற்று, இணக்கப்பாடுகளினொரு பகுப்பாய்வு மற்றும் அமுல்படுத்தும் கொள்கை, திட்டத்தின் உபாயம் என்பவற்றை உள்ளடக்குகிறது. கடப்பாடுகளென்பது வெளிவாரியான நியமங்கள், நெறிகள், தத்துவங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் மேலதிகமாக உள்வாரியான விழுமியங்கள், ஆணை, தத்துவங்கள், பட்டயங்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை உள்ளடக்கலாம். HAP சான்றிதழ் பெற்ற நிறுவனங்களுக்கு, இது HAP வகை கூறுதலுக்கான தத்துவங்கள் மற்றும் HAP மனிதநேய உடன்படிக்கை என்பவற்றை உள்ளடக்கும்.

**தரம்**
பாவனையாளர் அல்லது பயனாளியாகக் கூடியவரெனக் கருதப்படுபவரது குறிப்பிட்ட அல்லது உட்கிடையான தேவைகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்திற்குப் பொருத்தமான அம்சங்கள் மற்றும் குணவியல்புகள் என்பவற்றின் ஒட்டு மொத்தத் தன்மையைக் கொண்டிருத்தல் தரம் எனப்படும். தரமென்பது, வினைத்திறன், பயனுறுதித்தன்மை, பெறுபேறு மற்றும் தாக்கம் என்பவற்றினடிப்படையில் அளவிடப்படலாம்.

**தர முகாமைத்துவ முறைமை**
தர முகாமைத்துவ முறைமையென்பது, ஸ்தாபனமொன்று அதன் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை திருப்திப்படுத்துவதற்கு அதன் பயனுறுதித் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு மேற்கொள்கின்ற ஒரு கோவையான ஒருங்கிணைந்த செயன்முறைகளாகும். இது, ஸ்தாபனத்தின் தர முகாமைத்துவச் செயன்முறைகளின் பயனுறுதியான ஒன்றிணைதல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணப்படுத்தப்பட்ட தர கொள்கை, தர குறிக்கோள்கள், தர கைநூல் மற்றும் ஏனைய ஆவணங்களை உள்ளடக்குகிறது.

**மனிதநேய தர முகாமைத்துவ முறைமை**
மனிதநேய தர முகாமைத்துவ முறைமையென்பது, அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களது அத்தியாவசிய தேவைகள் மற்றும் அவர்களது கௌரவத்தை மதித்தல் என்பவற்றை எதிர்கொள்வதில் முகவரமைப்பின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேம்படுத்த உதவுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு தொகுதிச் செயன்முறைகளாகும்.

# 2. மனிதநேய வகைகூறுதல் உடன்படிக்கை

## 2.1 முகவுரை:

மனிதநேய வகை கூறுதலின் சாரம் என்பது, நாம் உதவுவதற்கு நாடுவோர்களின் தேவைகள், கரிசனைகள், செயலாற்றுதிறன் மற்றும் விருப்பு என்பவற்றை மதித்தல் என்பதுடன் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு, விசேடமாக அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களுக்கு எங்களது செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் குறித்து நாம் பதிலளிக்க வேண்டியவர்களென்பதை **ஏற்றுக்கொண்டும்;**
சர்வதேச மனிதநேயச் சட்டம், சர்வதேச அகதிச் சட்டம், மனித உரிமைகள் சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் தேசிய சட்டங்களை **மதித்தும்**;
ஆயுத மோதல்கள் மற்றும் பெரும் அழிவு வேளைகளில் மக்களைப் பாதுகாத்து உதவுவதற்கான அரசின் பிரதான கடமையை **மீளவலியுறுத்தியும்;**
மனிதநேய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொறுப்பிலுள்ள அனைவரும் பயனாளிகளாகக் கருதப்படுபவர்களின் நன்னிலை தொடர்பான கவனித்தலுக்கான பணியை **ஏற்றுக்கொண்டும்;**
மனித நேய உதவிப் பாதுகாப்பு தேவைப்படுபவர்களின் தெரிவிக்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில் அவர்களின் உரிமைகளை **வலியுறுத்த**ப்பட்டும்**;**
எங்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிறைவேற்றல் இடையூறுகள் எங்களது செயற்பாடுகளை மோசமாகப் பாதிக்குமென்பதைக் **கவனத்தில்** கொள்கிறோம்.

மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்களுடன் இணக்கப்பாடு கொண்ட முகவரமைப்புகளாக சான்று பெற்றவை, இதுவரை தங்களது மனிதநேயப் பணிகளை பாதிக்கும் அவர்களது செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்காக பற்றுறுதி கொள்வதுடன் மனிதநேய செயற்பாடுகளுக்கான கோட்பாடுகளுக்கமைவாக மேலதிகமாக பிரகடனப்படுத்தப்பட்ட நலன்கள் மற்றும் தர முகாமைத்துவ அளவு மட்டக் குறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

## 2.2 மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்துவம்

மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்களுடன் இணக்கப்பாட்டை நாடும் நிறுவனங்கள் முதலில் பொதுவான மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்துவங்கள்ள் தொடர்பில் அவர்களது மனிதநேயப் பணிகளுக்கான வகை கூறுவதற்கு பற்றுறுதி கொள்ளுதல் வேண்டும்.

### மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்ததுவங்கள்

**ஆரம்பநிலைக் தத்துவங்கள்**

- மனிதநேயம்: அனைத்து நபர்களுக்கும் உதவிகளைப் பெறுவதற்கும் மற்றும் வழங்குவதற்குமான உரிமையை நிலைநாட்டுதல்.
- பாரபட்சமின்மை: பால், வயது, சாதி, அங்கவீனம், இனம் மற்றும் தேசியம் அல்லது அரசியல், மதம், கலாச்சார அல்லது ஸ்தாபன ரீதியான இணைப்பு என்பனவற்றின் அடிப்படையில் இல்லாது தேவை மற்றும் அவசர நிலைமை என்பது தொடர்பிலான அளவில் மனிதநேய உதவிகளை வழங்குதல்.

**இரண்டாம்நிலைக் தத்துவங்கள்**

- அறிவுபூர்வமான உடன்பாடு: பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் ஆகியோர் பிரேரிக்கப்பட்ட மனிதநேய செயற்பாடுகள் மற்றும் அதன் விளைவுகள் என்பவற்றை புரிந்து கொண்டு சம்மதிப்பதை உறுதி செய்தல்.
- பராமரிப்புக் கடமை: பயனாளிகளாகக் கருதப்படுபவர்களது நன்னிலை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களை மனிதநேய உதவிகள் திருப்தி செய்வதை அல்லது அதைவிட மேலதிகமாகவிருப்பதை உறுதி செய்தல்.
- சான்றாக இருத்தல்: அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களின் நன்னிலையைப் பாதிக்கும் கொள்கைகள் அல்லது நடைமுறைகள் பற்றி அறிவித்தல்.

**மூன்றாம்நிலைக் தத்துவங்கள்**

- வெளிப்படைத்தன்மை: பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் மற்றும் குறிப்பிடப்பட்ட தரப்பினர் ஆகியோர்களுக்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களும் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- சுயாதீனத்தன்மை: முகவரமைப்பின் நிர்வாக அமைப்பின் அதிகாரத்தின் கீழ் இயங்குவதுடன் முகவரமைப்பின் ஆணையைப் பின்பற்றி ஒழுகுதல்.
- நடுநிலைமை: ஆயுத மோதலொன்றின் தரப்பினருக்கு பொருள் ரீதியான அல்லது அரசியல் ரீதியான ஆதரவளிப்பதைத் தவிர்த்தல்.
- இணைந்து செயற்படல்: மனிதநேய உதவிகளுக்கான சமூகத்தின் பொறுப்புள்ள ஒரு உறுப்பினராகச் செயற்படுதல்.

## 2.3 மேலதிக நலன்களைப் பிரகடனப்படுத்தல்

மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்களுடன் இணங்கும் ஸ்தாபனங்கள், அனர்த்த இடர்களிலிருந்து தப்பியோர்கள் மற்றும் பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள், குறித்த பங்கேற்பாளர்கள் போன்றவர்களின் நன்னிலைகள் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கக் கூடிய மேலதிக இணைப்புகள், நலன்கள், விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை பிரகடனப்படுத்தியுள்ளது. இவை கீழ்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கக் கூடுமாயினும் அவை இவற்றுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை.

- பால்நிலை தொடர்பிலான கொள்கை
- வயது தொடர்பிலான கொள்கை
- சிறுவர் பாதுகாப்புக் கொள்கை
- சுற்றுச்சூழல் கொள்கை
- உடல் ரீதியான அல்லது உள ரீதியான குறைபாடு தொடர்பிலான கொள்கை
- மோதல் தவிர்ப்பு மற்றும்/அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கொள்கை
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோய் கொள்கை
- தொழில்நுட்ப நிபுணத்துவம்
- மத அல்லது அரசியல் இணைப்புகள்
- முரண்பாட்டு அக்கறைக் கொள்கை

## 2.4 மனிதநேய முகாமைத்துவ அளவுமட்டக் குறிகள்

மனிதநேய வகைகூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமங்களுடன் இணங்கும் ஸ்தாபனங்கள் கீழ் குறிப்பிட்ட செயற்பாட்டு அளவுமட்டக் குறிகளை திருப்திகரமாக செய்துகாட்ட முடியும்.

1. மனிதநேய மற்றும் தர முகாமைத்துவம்
2. வெளிப்படைத்தன்மை
3. பயனாளிகளின் பங்கேற்பு
4. ஊழியர் திறமைகள்
5. முறைப்பாடுகளைக் கையாளுதல்
6. தொடர்ச்சியாக மேம்படுத்தல்

நியமங்கள் ஒவ்வொரு அளவுமட்டக் குறியின் கீழும் நிறுவனங்கள் திருப்திசெய்ய வேண்டிய தேவைப்பாடுகளையும் அவை ஒவ்வொன்றிற்குமான முன்மொழியப்பட்ட உறுதிசெய்யும் வழிவகைகளையும் வரையறுக்கின்றன.

தேவைப்பாடுகளுக்கான விபரங்கள் மற்றும் செயல் நிறைவேற்றுக் குறிக்காட்டிகள் என்பன விடயத்திற்குரிய பொருளாக இதுவரை இல்லாதிருப்பினும் மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமத்துடன் இணங்கிக் கொள்ளும் ஸ்தாபனங்கள் பின்வருபவை தொடர்பாகவும் உரிய அவதானத்தைச் செலுத்தும்:

1. ஏனைய மனிதநேய செயற்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைதல் மற்றும் கூட்டிணைதல்
2. நெறிமுறையிலான நிதி சேகரிப்பு நடைமுறைகளுக்கு பற்றுருறுதியுடையதாக இருத்தல்
3. உள்ளூர் செயல்திறன்கள் மற்றும் வளங்கள் என்பவற்றைக் கொண்ட வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்

## 2.5 மனிதநேயப் பங்காளர்களுடன் பணியாற்றுதல்

உதவி வழங்கும் அமைப்புகள் மனிதநேயப் பெறுமதியை இரண்டு வேறுபட்ட வழிகளில் வழங்குகின்றன. அவை, ஊழியர் மற்றும் தொண்டர்களினூடாகச் செயல் திட்டங்களை நேரடியாக அமுல்படுத்தும் <u>செயல்படுதல் நிலை</u> மற்றும் ஊழியர்கள் அல்லது தொண்டர்களுடாக செயல் திட்டங்களை அமுல்படுத்துமொரு பங்காளருக்குத் தேவையான நிதி, பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நேரடியான <u>செயல்படுதலற்ற நிலை</u> என்பவையாகும். சில முகவரமைப்புகள் இவ்விரு அணுகுமுறைகளையும் ஒன்றிணைத்துச் செயற்படுகின்றன.

மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவத்தில் HAP 2007 இன் நியமம் செயல்படுதல் நிலை மற்றும் செயற்படுதலற்ற நிலை ஆகிய இரு முறையான மனிதநேயப் பணிகளிலும் பிரயோகிக்க முடியும்.

- **மனிதநேய பங்குடமை வரையறுத்தல்**

  ஒரு கூட்டிணைவு என்பது ஓர் பொதுவான நோக்கத்திற்காக தெளிவாக வரையறை செய்த எதிர்பார்ப்புகள் மற்றும் பொறுப்புகளுடன் உருவாக்கப்பட்ட இரண்டு சுயாதீனமான ஸ்தாபனங்களுக்கிடையில் பரஸ்பரம் மதிப்புடன் கூடிய ஒரு தொடர்பு நிலையாகும். கூட்டிணைவு முறையான ஒப்பந்த உடன்படிக்கைகளுடனோ அல்லது அவையின்றியோ ஸ்தாபிக்க முடியும். இதற்கான தரப்பினர்கள் ஒரு சிறிய சமூக அடிப்படை ஸ்தாபனங்கள் அல்லது தேசிய/சர்வதேச அளவிலான நிறுவனங்களாக இருக்க முடியும். ஒரு மனிதநேயப் பங்குடமையென்பது இரண்டு அல்லது மேற்பட்ட அமைப்புகள் அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு தங்கள் வளங்களை ஒன்றிணைக்க இணங்குவதாகும்.

- **கூட்டிணைவின் நடைமுறை**

  மனித நேய செயற்பாட்டாளர்களின் வேறுபட்டிருக்கும் தன்மை மற்றும் மனிதநேயப் கூட்டிணைவின் வேறுபட்ட வடிவங்கள் என்பன நியதிகளை ஏற்படுத்துவதில் மனிதநேயப் பங்காளர்களுக்கிடையே நெகிழ்ச்சித்தன்மையை வேண்டி நிற்கின்றன.சில சந்தர்ப்பங்களில் சிறந்த மனிதநேயப் பங்காளர்களாக இருப்பவர்கள் சிறந்த நடைமுறையொன்றின் அனைத்துத் தொழில்நுட்ப தரங்களையும் எட்டாதவராக அல்லது அதில் ஆர்வமற்றவராக அல்லது சான்றளிக்கப்பட்ட முகவரமைப்பின் மனிதநேய வகை கூறுதல் கட்டமைப்புடன் இணங்கவியலாதவர்களாக இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், சான்று பெற்ற முகவரமைப்பு பகுதியளவிலான இணக்கப்பாட்டைக் காண்பிக்கும் மனிதநேய செயற்பாட்டாளரை ஆதரிப்பதா என்பதை நியாயப்படுத்துவதற்கு மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்துவங்களைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, சான்று பெற்ற நிறுவனமொன்று மூன்றாவது நிலை மனிதநேயக் தத்துவமொன்றுடன் இணங்க முடியாத அல்லது இணங்குவதற்கு ஆர்வமற்ற மனிதநேயப் பங்காளரை, விசேடமாக அவர் ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை மனிதநேயக் தத்துவங்களுடன் நன்கு இணங்குகின்ற விதத்தில் மனிதநேய உதவிகளை வழங்கும் பட்சத்தில் அப்பங்காளருக்கு ஆதரவளிக்கலாம்.

- **தரமான கூட்டிணைவுகள்**

  தரமான கூட்டிணைவில் பரஸ்பர நம்பிக்கை மற்றும் மதிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஒரு தரப்பினர் மற்றைய தரப்பின் நடத்தை அல்லது செயற்பாடுகள் என்பவற்றின் மேல் நிபந்தனைகளை விதிக்க முற்படுகையில் கூட்டிணைவு பாதிப்புக்குள்ளாகிறது. இந்த வகையில், HAP சான்றிதழ் அளிக்கும் முறைமை நிறுவனத்தின் மனிதநேயப் பங்காளர்களிடமிருந்து சான்று அந்தஸ்தை எதிர்பார்க்கவோ அல்லது அவற்றுக்கு சான்று அந்தஸ்தை அளிக்கவோ மாட்டாது. HAP நியமங்களுக்கு பற்றுறுதி கொண்ட நிறுவனங்கள் பங்காளர்களது முகாமைத்துவ நடைமுறைகளில் HAP அளவுமட்டக் குறிகளை விதிப்பதற்கு முற்படின் அவர்களது மனிதநேயப் பங்குடமைகளின் தரத்தினைப் பாதிக்கலாம். எவ்வாறாயினும், சிறந்த பங்குடமைகள் தொடர்ச்சியான மேம்படுத்தல் கொள்கைக்கு இரு தரப்புகளினாலுமான பரஸ்பரம் வெளிப்படையான தன்மை மற்றும் பற்றுறுதி என்பவற்றை தேவைப்படுத்துகிறது. இந்த வகையில் HAP சான்று முகவரமைப்புகள் குறைந்த பட்சம் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

  - HAP நியமம் அவர்களது மனிதநேயப் பங்காளர்களிலும் தாக்கத்தைக் கொண்டிருப்பதால் வகைகூறுதல் மற்றும் தரமான முகாமைத்துவம் என்பவற்றுக்கான அவர்களது கடப்பாடுகளை விளக்குதல்.
  - வகைகூறுதல் தத்துவங்கள் மற்றும் மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்துவங்கள் என்பவை தொடர்பில் கூட்டிணைவின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை நோக்கல்.

# 3. HAP 2007 இன் நியமத்திற்கான அளவுமட்டக் குறிகள்

**அளவுமட்டக் குறி 1:**
முகவரமைப்பு மனிதநேய மற்றும் தர முகாமைத்துவ முறையொன்றை ஸ்தாபிக்கும்

**அளவுமட்டக் குறி 2:**
முகவரமைப்பு பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், முகவரமைப்பு ஊழியர்கள் மற்றும் ஏனைய குறிப்பிடப்பட்ட பங்கேற்பாளர்கள் ஆகியோர்களுக்குப் பின்வரும் தகவல்களை பகிரங்கமாகக் கிடைக்கச் செய்தல் வேண்டும்: (அ) ஸ்தாபனத்தின் பின்னணி; (ஆ) மனிதநேய பொறுப்புக் கூறுதலுக்கான கட்டமைப்பு; (இ) மனிதநேய பணித்திட்டம் (ஈ) முன்னேற்ற அறிக்கைகள்; மற்றும் (உ) முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள்

**அளவுமட்டக் குறி 3:**
முகவரமைப்பு, பயனாளிகள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் ஆகியோரை நிகழ்ச்சித் திட்டத்தின் தீர்மானங்களில் பங்கேற்பதற்கும் மற்றும் தெரிவிக்கப்பட்ட அவர்களது ஒப்புதல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், இயலச்செய்தல்.

**அளவுமட்டக் குறி 4:**
முகவரமைப்பு அதன் மனிதநேய மற்றும் முகாமைத்துவ முறையை அமுல்படுத்துவதற்குத் தேவையான ஊழியர்களது திறமைகள், மனப்பாங்கு மற்றும் அபிவிருத்தித் தேவைகளை தீர்மானிக்கும்

**அளவுமட்டக் குறி 5:**
முகவரமைப்பு, பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், முகவரமைப்பு ஊழியர்கள், மனிதநேயப் பங்காளர்கள் மற்றும் ஏனைய குறித்த அமைப்புகள் என்பவற்றுக்குப் பயனுறுதியான அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான வகையில் முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறைகளை ஸ்தாபித்து, அமுல்படுத்தல் வேண்டும்

**அளவுமட்டக் குறி 6:**
முகவரமைப்பு அதன் மனிதநேய வகை கூறுதலுக்கான கட்டமைப்பு, மனிதநேய தர முகாமைத்துவ முறை என்பவற்றின் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கானதொரு செயன்முறையை ஏற்படுத்துதல் வேண்டும்

# அளவு மட்டக்குறி ஒன்று

**முகவரமைப்பு மனிதநேய மற்றும் தர முகாமைத்துவ முறையொன்றை ஸ்தாபிக்கும்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 1.1 | முகவரமைப்பு சம்பந்தப்பட்ட அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரியான வகை கூறும் மற்றும் தர நியமங்கள், ஒழுக்கக்கோவைகள், வழி காட்டல்கள் மற்றும் நிறுவனத்தினால் பற்றுறுதி கொள்ளப்பட்ட கோட்பாடுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அதன் மனிதநேய வகை கூறும் கட்டமைப்பை ஆவணப்படுத்தல் வேண்டும். | 1 | ஆவணப்படுத்தப்பட்ட மனிதநேய பொறுப்புக் கூறுதல் கட்டமைப்பின் பிரதியை மீளாய்வு செய்தல் அத்துடன் முகவரமைப்பின் வெளியிடாமைக் கொள்கை உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து பற்றுறுதிகளுடனான மாற்றெதிர் சரிபார்த்தலுடன் மீளாய்வு செய்தல் |
| | | 2 | முகவரமைப்பினூடாக அதன் மனிதநேய பங்காளர்களுக்கு பகிரங்கமாகக் கிடைக்கச் செய்யப்பட்ட ஆவணத்தை சரிபார்த்தல் |
| | | 3 | வகை கூறுதல் தத்துவங்கள் மற்றும் மனிதநேய செயற்பாட்டுக் தத்துவங்கள்கள் என்பவற்றுடன் இணங்குவதில் மனிதநேய பங்காளர்களின் செயலாற்றும் திறனை விருத்தி செய்வதில் அவர்களுக்கு உதவுவதற்கான நிறுவனத்தின் தந்திரோபாயத்தை மீளாய்வு செய்தல் |
| 1.2 | மனிதநேய மற்றும் தர முகாமைத்துவ முறையானது மனித நேய வகை கூறுதல் கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கு இயலச் செய்தது என்பதை நிறுவனம் எடுத்துக்காட்டுதல் வேண்டும் | 1 | மனிதநேய மற்றும் தர முகாமைத்துவ முறைக்கான அமுல் படுத்தல் படிமுறைகளின் பயன்பாட்டை மீளாய்வு செய்து உறுதிப்படுத்தல். |
| | | 2 | முகவரமைப்பின் மனிதநேய பொறுப்புக் கூறுதல் கட்டமைப்புப் பற்றிய விழிப்புணர்வை உறுதிப்படுத்துவதற்கு மனிதநேயப் பங்காளர்களை நேர்காணல் செய்தல் |

# அளவு மட்டக்குறி இரண்டு

**முகவரமைப்பு பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், முகவரமைப்பு ஊழியர்கள் மற்றும் ஏனைய குறிப்பிடப்பட்ட பங்கேற்பாளர்கள் ஆகியோர்களுக்குப் பின்வரும் தகவல்களை பகிரங்கமாகக் கிடைக்கச் செய்தல் வேண்டும்: (அ) ஸ்தாபனத்தின் பின்னணி (ஆ) மனிதநேய பொறுப்புக் கூறுதல் கட்டமைப்பு (இ) மனிதநேய பணித்திட்டம் (ஈ) முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் (உ) முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 2.1 | சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் பயனாளிகள் மற்றும் குறித்த பங்கேற்பாளர்களினால் பெற்றுக்கொள்ளக் கூடியதும் மற்றும் கிரகிக்கக் கூடியதுமான மொழிகள், வடிவங்கள் மற்றும் ஊடகங்களில் வழங்கப்படுவதை முகவரமைப்பு உறுதி செய்தல் வேண்டும் கீழ் குறிப்பிட்டுள்ள வரைவிலக்கணங்களைப் பார்க்கவும் | 1 | மொழிகள், வடிவங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன எவ்விதம் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை மீளாய்வு செய்தல் |
| | | 2 | நிறுவனத்தின் பின்னணி, மனிதநேய வகை கூறும் கட்டமைப்பு, மனிதநேய திட்டம் மற்றம் நிதிச் சாரம்சக் கூற்று, முன்னேற்ற அறிக்கை மற்றும் முறைப்பாடுகளைக் கையாளும் செயல்முறைகள் என்பவை மீது வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை மீளாய்வு செய்தல் |
| | | 3 | தகவல் பரப்புரைக்கான வழிகாட்டல்களை மீளாய்வு செய்தல் |
| | | 4 | தகவல் கிடைக்கப் பெறும் தன்மை மற்றும் அணுகும் வழிமுறைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல் |
| | | 5 | பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் உள்ளூர் ஊழியர்கள் மற்றும் குறித்த பங்கேற்பாளர்கள் பயன்படுத்தும் மொழியையும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆவணங்களில் பயன்படுத்தப் பட்ட மொழியையும் ஒத்து நோக்கவும். |
| | | 6 | கிடைக்கப் பெறும் தகவல்களைச் சரி பார்ப்பதற்குப் பயனாளிகளை நேர்காணல் செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| 2.2 | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகளுடன் இணங்கிக் கொண்டது போன்று பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறை மற்றும் வழங்கப்படக்கூடிய பொருள் உதவிகள் பற்றி முகவரமைப்பு அவர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். | 1 | கூட்டத்தின் அறிக்கை, உடன்படிக்கைக் கடிதங்கள், தகவல் பலகைகள் அல்லது அடையாளம் காணக்கூடிய வழிகள் என்பவற்றினூடாக தெரிவு செய்யப்படும் நியமனங்கள் மற்றும் உரித்துகள் பற்றி பயனாளி களாகக் கருதப்பட்டவர்கள் அறியத் தரப்பட்டதை எடுத்துக் காட்டவும் |
| | | 2 | பயனாளிகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் மற்றும் முகவரமைப்பின் பணியாளர்களை நேர்காணல் செய்தல். |
| 2.3 | நிறுவனம், பகிரங்கமாகக் கிடைக்கின்ற அனைத்துத் தகவல்களிலும் அதன் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும் | 1 | தொடர்பு கொள்ளும் விபரங்களை பொருத்தமானதும் மற்றும் அணுகக்கூடிய பொதுத் தளங்களிலும் மீளாய்வு செய்தல் |
| 2.4 | நிறுவனம் ஊழியர்களின் பாத்திரம் மற்றும் பொறுப்புக்கள் உட்பட தமது கட்டமைப்பை பற்றிய தகவல்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் | 1 | வழங்கப்பட்ட தகவல்களின் கிடைக்கப் பெறும் தன்மை மற்றும் அணுகுதல்கள் பற்றி மீளாய்வு செய்தல் |

## வரைவிலக்கணங்கள்:

**மனிதநேயத் திட்டம்:** கால வரையறை நிதிசாராம்சம், முழுமையான இலக்கு (வெளியீடுகள்/எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்) என்பவற்றை உள்ளடக்கியது.

**முன்னேற்ற அறிக்கைகள்:** மனிதநேய திட்டம் மற்றும் நிதி சாராம்ச அறிக்கை என்பவற்றுக்கு எதிராக அளவிடப்படும் முன்னேற்றங்களை உள்ளடக்குகின்றது. அறிக்கைகளை சம்மதிக்கப்பட்ட கால இடைவெளியில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

# அளவு மட்டக்குறி மூன்று

**முகவரமைப்பு, பயனாளிகள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் ஆகியோரை நிகழ்ச்சித் திட்டத்தின் தீர்மானங்களில் பங்கேற்பதற்கும் மற்றும் தெரிவிக்கப்பட்ட அவர்களது ஒப்புதல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இயலச் செய்தல்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 3.1 | பால், வயது, ஊனம் மற்றும் ஏனைய இனம் காணப்பட்ட நலிவுத்தன்மைகள் என்பவற்றுக்கான தனியான குறித்துரைத்தலுடன் முகவரமைப்பு பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் படிமுறையைக் குறிப்பிடல் வேண்டும். | 1. | பயனாளிகளாகக் கருதப்படுபவர்களை இனம் காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொறிமுறைகளை மீளாய்வு செய்தல் |
| | | 2. | பங்குபற்றுவதற்கு உதவிய செயன்முறைகளை மீளாய்வு செய்தல். |
| | | 3. | பங்குபற்றுதற்கு இயலச் செய்த செயன்முறைகள் பற்றி ஊழியர்களை நேர்காணல் செய்தல். |
| 3.2 | செயல்திட்ட வடிவம், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதலில் பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளை பங்குபற்றுவதற்கு முகவரமைப்பு இயலச்செய்தல் வேண்டும். | 1. | செயலாற்றுந்திறன் பற்றிய பகுப்பாய்வு அதன் அமுல்படுத்துவதில் எவ்விதம் செல்வாக்கு செலுத்தியது என்பதை எடுத்துக் காட்டல். |
| | | 2. | பயனாளிகளின் பிரதிநிதிகளை நியமிக்கும் செயன்முறையை மீளாய்வு செய்தல். |
| | | 3. | செயல்திட்ட வடிவமைப்பு, அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் என்பவை மீதான பயனாளிகளின் உண்மையான உள்ளிடல் மற்றும் தாக்கத்தை மீளாய்வு செய்தல். |
| | | 4. | பயனாளிகளைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீளாய்வு செய்தல். |
| | | 5. | பயனாளிகளின் பிரதிநிதிகளுடன் நடாத்திய சந்திப்புகளின் அறிக்கைகளை மீளாய்வு செய்தல். |

# அளவு மட்டக்குறி நான்கு

**முகவரமைப்பு அதன் மனிதநேய மற்றும் தர முகாமைத்துவ முறையை அமுல்படுத்துவதற்குத் தேவையான ஊழியர்களது திறமைகள், உளப்பாங்கு மற்றும் அபிவிருத்தித் தேவைகள் என்பவற்றைத் தீர்மானிக்கும்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 4.1 | முகவரமைப்பு, அதன் ஊழியர்களிடமிருந்து தேவைப்படும் திறமைகள் (விடய அறிவு, ஆற்றல், மற்றும் நடத்தைகள்) மற்றும் உளப்பாங்கு பற்றிய ஒரு கூற்றைப் பேணுதல் வேண்டும். | 1 | வேலை விபரணம், ஆட்சேர்ப்புக் கோவைகள் மற்றும் வேலைக்கான வெற்றிட அறிவித்தல்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல் |
| | | 2 | ஆட்சேர்ப்பு, வேலையை ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் பயிற்சி என்பவற்றுக்குப் பொறுப்பான முகவர் அமைப்பு ஊழியர்களை நேர்காணல் செய்தல் |
| 4.2 | முகவரமைப்பு, அதன் ஊழியர்கள் மனிதநேய வகை கூறும் கட்டமைப்பு மற்றும் மனிதநேய தர முகாமைத்துவ முறை என்பவை பற்றியும் அதன் தொடர்பு, முக்கியத்துவம் என்பவை பற்றி அறிந்திருப்பதையும் அத்துடன் அவற்றின் அமுல்படுத்தல்களில் அவர்களது பொறுப்புகள் பற்றிப் புரிந்து கொள்வதையும் உறுதிப்படுத்தல் வேண்டும். | 1 | அறிமுகப்படுத்தல் மற்றும் விளக்கம் அளித்தல் செயன்முறைகளை மீளாய்வு செய்தல் |
| | | 2 | விழிப்புணர்வை சோதித்தறிவதற்கு ஊழியர்களை நேர்காணல் செய்தல் |
| 4.3 | முகவரமைப்பு அதன் ஊழியர்களின் விடய அறிவு, விசேட ஆற்றல்கள், நடத்தைகள் மற்றும் உளப்பாங்குட்பட அவர்களின் செயற்றிறன் மற்றும் திறமைகளை மீளாய்வு செய்வதற்கு ஒரு திட்ட முறையை அமுல்படுத்தல் வேண்டும் | 1 | செயற்றிறன் முகாமைத்துவ முறையை மீளாய்வு செய்தல் |
| | | 2 | செயற்றிறன் மதிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் ஏனைய முறையான அணுகுமுறைகளை மீளாய்வு செய்தல் |
| | | 3 | பிற்தொடர்ச்சி நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் |
| | | 4 | ஊழியர்களை நேர்காணல் செய்து மதிப்பீடு மற்றும் செயற்றிறன் முகாமைத்துவத்தின் தாக்கத்தை பரீட்சித்தறிதல் |
| 4.4 | மனிதநேய தர முகாமைத்துவ முறையின் பயனுறுதியான அமுல்படுத்தலுக்காக ஊழியர்களின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கு முகவரமைப்பு இயலச் செய்தல் வேண்டும் | 1 | ஊழியர் பயிற்சிப் பதிவேடுகளை மீளாய்வு செய்தல் |
| | | 2 | ஏனைய ஊழியர் அபிவிருத்தி அணுகு முறைகளை மீளாய்வு செய்தல் |
| | | 3 | முகவரமைப்பின் மனிதநேய பங்காளர்களின் தொடர்ச்சியான மேம்படுத்தல்களுக்கான அதன் உதவிகளை மீளாய்வு செய்தல் |

# அளவு மட்டக்குறி ஐந்து

**முகவரமைப்பு பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், நிறுவன ஊழியர்கள், மனிதநேய பங்காளர்கள் மற்றும் ஏனைய குறித்த அமைப்புகள் என்பவற்றுக்குப் பயனுறுதியான அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான வகையில் முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறைகளை ஸ்தாபித்து, அமுல்படுத்தல் வேண்டும்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 5.1 | முறைப்பாடுகளை கையாள்வதற்கு பொருத்தமான வழிவகைகள் பற்றிப் பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள சமூகத்திடம் முகவரமைப்பு கேட்க வேண்டும் | 1 | கலந்தாலோசனைகளிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் முறைப்பாடுகளை கையாளும் முறைகளில் உள்ளடக்கப் பட்டிருப்பதை எடுத்துக்காட்டல் |
| 5.2 | முகவரமைப்பு முறைப்பாடுகளைக் கையாளும் முறையை ஸ்தாபித்து ஆவணப்படுத்தல் வேண்டும். அது கீழ்வருவனவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்:<br>• பயனாளிகள் மற்றும் ஏனைய குறித்த அக்கறை உடைய தரப்பினர் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்வதற்கான உரிமை<br>• செயன்முறையின் நோக்கம், செயற்பாட்டு எல்லைகள் மற்றும் மட்டுப்படுத்தல்கள்<br>• முறைப்பாடுகளை சமர்ப்பிப் பதற்கான முறைகள்<br>• முறைப்பாடுகளை செயன்முறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் படிமுறைகள்<br>• முறைப்பாடுகளின் இரகசியத் தன்மை பேணுதல் மற்றும் பழி வாங்கும் நடவடிக்கை எடுக்காதிருப்பது பற்றிய கொள்கை<br>• நிறுவனத்தினால் கையாள முடியாத முறைப்பாடுகளை மற்றைய தரப்பினருக்கு பாதுகாப்பாகத் தெரியப்படுத்தும் செய்முறை<br>• பதிலிறுப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கான உரிமை | 1 | ஆவணப்படுத்தப்பட்ட முறைகளை மீளாய்வு செய்தல். |
| | | 2 | முறைப்பாட்டாளர்கள் முறைகளைப் புரிந்து கொண்டு பயன்படுத்தக் கூடியதாகவிருந்தது என்பதை சரி பார்ப்பதற்கு சில முறைப்பாட்டு மாதிரிகளை மீளாய்வு செய்தல் |
| | | 3 | இந்தத் தேவைப்பாட்டை அமுல்படுத்துவதற்கு மனிதநேயப் பங்காளர்களுக்கு அளிக்கப்படும் உதவி, பாதீடு மற்றும் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்தல் |
| | | 4 | முறைப்பாட்டு முறைகளைப் பற்றிய புரிந்து கொள்ளல் மற்றும் அதன் போதுமான தன்மை குறித்து கள ஊழியர்கள், பாதிக்கப்பட்ட சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளாகக் கருதப்பட்டோர் ஆகியோரை நேர் காணல் செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| 5.3 | பயனாளிகளாகக் கருதப்படுபவர்கள் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் முகவரமைப்பின் ஊழியர்கள் ஆகியோர் முறைப்பாடுகளை கையாளும் செயன் முறைகளை புரிந்து கொள்வதை முகவரமைப்பு உறுதி செய்தல் வேண்டும் | 1 | இந்தக் குழுக்கள் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்வதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்குமான முறைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான உபாயங்கள் மற்றும் செயற்பாடுகளை மீளாய்தல் |
| | | 2 | பயனாளிகளாகக் கருதப்பட்டவர்களுக்கு முறைப்பாடுகளைக் கையாளும் முறைகள் பற்றி கிடைத்த ஆவணங்களை மீளாய்வு செய்தல் |
| | | 3 | முறைப்பாடுகளைக் கையாளும் முறைகள் பற்றிய விழிப்புணர்வு, அதன் போதுமான தன்மை மற்றும் அதன் நேர்மைத்திறன் மீதான நம்பிக்கை என்பவற்றை உறுதிப்படுத்த ஊழியர்கள் பாதிக்கப்பட்ட சமூக உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளாகக் கருதப்படுபவர்களை நேர்காணல் செய்தல் |
| 5.4 | முகவரமைப்பு, பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து முறைப்பாடுகளும் குறிப்பிடப் பட்ட முறைகளுக்கமைய கையாளப் படுவதை சரிபார்த்தல் வேண்டும் | 1 | கையாளும் திட்ட முறையின் நேர்மைத் தன்மையை சரிபார்ப்பதற்கு நிலுவை யிலுள்ளதும் மற்றும் செயன்முறைப் படுத்தப்பட்ட முறைப்பாடுகள் ஆகிய இரண்டினதும் மாதிரிகளை மீளாய்வு செய்தல் |
| | | 2 | முறைப்பாடுகளைக் கையாளும் செயல்முறைகளின் நேர்மைத்திறன் தொடர்பான அறிக்கைகளை மீளாய்வு செய்தல் |
| 5.5 | முகவரமைப்பு, 5.2 இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் முரண்படாத வகையில் அதன் ஊழியர்களுக்காக முறைப்பாடுகளைக் கையாளும் ஓர் பயனுறுதியானதும் மற்றும் பாதுகாப்பானதுமான பொறிமுறையை ஸ்தாபித்து அமுல்படுத்தல் வேண்டும் | 1 | கையாளும் முறை மற்றும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மாதிரிகளை மீளாய்வு செய்தல் |
| | | 2 | கையாளும் முறை பற்றி விழிப்புணர்வு மற்றும் அதன் நேர்மைத்தன்மை மீதான நம்பிக்கையை சரிபார்க்க ஊழியர்களை நேர்காணல் செய்தல் |

# அளவு மட்டக்குறி ஆறு

**முகவரமைப்பு அதன் மனிதநேய வகை கூறுதல் கட்டமைப்பு மற்றும் மனிதநேய தர முகாமைத்துவ முறை என்பவற்றின் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கானதொரு செயன்முறையை ஏற்படுத்துதல் வேண்டும்**

| இல | தேவைப்பாடு | இல | உறுதிப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|---|---|
| 6.1 | முகவரமைப்பு கீழ் குறிப்பிட்டவற்றின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திய செயன்முறைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்:<br>• முகவரமைப்பின் மனிதநேய வகை கூறும் கட்டமைப்பு<br>• HAP இன் அனைத்து அளவுமட்டக் குறிகள் உட்பட நிறுவனத்தின் மனித நேய மற்றும் முகாமைத்துவ முறை | 1 | தொடர்ச்சியான மேம்படுத்தல் முறைக்கான செயன்முறை ஆவணம்/ திட்டம் என்பவற்றை மீளாய்வு செய்தல் |
| | | 2 | அது உருவாக்கப்பட்டு கடைசியாக இற்றைப்படுத்தப்பட்ட திகதிகளைக் குறித்துக் கொள்ளவும் |
| | | 3 | பரப்புரை: முகவரமைப்பினுள் அனைத்து மட்டங்களுக்கும் சமீபகால பதிப்பு கிடைக்கப் பெறுகிறதா என்பதைக் கவனிக்கவும் |
| | | 4 | செய்முறையினை முன்னேற்றுவதற்கு இடம் பெற்ற கலந்துரையாடல்கள், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பவற்றை கவனத்தில் கொள்வதற்காக கூட்டநிகழ்ச்சிநிரல் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல். |
| | | 5 | கற்றுக்கொண்ட பாடங்கள் தற்போதைய செயன்முறைகளில் எத்தகைய தாக்கத்தினைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டல் |
| | | 6 | நிர்வாக அமைப்புகளிடமிருந்தான பின்னூட்டல்களை மீளாய்வு செய்தல் |
| | | 7 | முகவரமைப்பு தொடர்பான உள்ளக மற்றும் வெளிவாரியான கணக்காய்வு மற்றும் மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதுடன் மதிப்பீட்டுப் பரிந்துரைகள் எவ்விதம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள என்பதுடன் கற்றுக் கொண்டவையை உள்வாங்கி உள்ளதென்பதை மீளாய்வு செய்தல் |
| 6.2 | முகவரமைப்பு அதன் மனிதநேயப் பங்காளர்களுடன் சேர்ந்து வகை கூறும் தத்துவங்கள் மற்றும் மனிதநேய செயற்பாட்டுக் தத்துவங்கள் என்பன கூட்டிணைவின் தொடர்பில் தரத்தை மேம்படுத்துவதற்கு இணங்கிக் கொண்ட வழி முறைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் | 1 | பங்காளருக்கான திட்டங்களின் (இணங்கிக் கொண்ட செயற்பாடுகள், கற்றுக்கொள்ளலுக்கான உபாயங்கள்) மேம்படுத்தல்களை மீளாய்தல், திட்டம் வரையப்பட்ட திகதியைக் குறித்துக் கொள்ளல் |
| | | 2 | கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் தாக்கத்தை குறித்துக் கொள்ளல் |
| | | 3 | பங்காளர் ஒப்பந்தங்களை மீளாய்தல் மற்றும் இருதரப்புகளினதும் ஒப்பந்த ரீதியிலான உதவி மற்றும் எதிர் பார்ப்புகள் இவற்றில் உள்ளடக்கப் பட்டிருப்பதை குறித்துக் கொள்ளல் |

# அருஞ்சொல் அகராதி

| | |
|---|---|
| Accountability | வகை கூறுதல் |
| Affiliation | இணைப்பு |
| Baseline | அடிப்படை |
| Benchmark | அளவுமட்டக் குறி |
| Beneficiaries | பயனாளிகள் |
| Certification | சான்றளித்தல் |
| Code of conduct | நடத்தைக் கோவை |
| Collaboration | கூட்டிணைப்பு |
| Complaint handling procedure | முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை |
| Complementarity | ஒன்றுக்கொன்று இணைந்து செயற்படல் |
| Compliance | இணக்கப்பாடு |
| Conflict of interest | முரண்பாடான நலன்கள் |
| Continual Improvement | தொடர்ச்சியான மேம்பாடு |
| Coordination | ஒருங்கிணைத்தல் |
| Covenant | உடன்படிக்கை |
| Cross-reference | மாற்றெதிர் சரிபார்த்தல் |
| Deliverable | வழங்கப்படும் உதவி |
| Disaggregate | வேறாக்குதல் |
| Disaster survivors | அனர்த்த இடர்களிலிருந்து தப்பியவர்கள் |
| Duty of care | பராமரிப்புக் கடமை |
| Effectiveness | பயனுறுதித்தன்மை |
| Efficiency | வினைத்திறன் |
| Evaluate | மதிப்பிடுதல் |
| Guidelines | வழிகாட்டிகள் |
| Humanitarian | மனிதநேயம் கொண்ட |
| Humanitarian Accountability Framework | மனிதநேய வகை கூறுதலுக்கான கட்டமைப்பு |
| Humanitarian Accountability Partnership | மனிதநேய பொறுப்புககூறுதலுக்கான கூட்டிணைவு |
| Humanitarian Quality Management system | மனிதநேய தர முகாமைத்துவ முறை |
| Humanity | மனிதநேயம் |
| Impairment | குறைபாட்டுத் தன்மை |
| Impartiality | பாரபட்சமற்ற தன்மை / பக்கசார்பின்மை |
| Implementing partner | நடைமுறைப்படுத்தும் பங்காளி |
| Informed consent | விளக்கமளிக்கப்பட்ட ஒப்புதல் |
| Management | முகாமைத்துவம் |
| Mandate | ஆணை |
| Means of Verification | உறுதிப்படுத்தும் வழிவகைகள் |
| Mechanism | வழிமுறை |
| Monitoring and Evaluation | கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் |
| Neutrality | நடுநிலைமை |
| Non–disclosure policy | வெளிப்படுத்தாதிருக்கும் கொள்கை |
| Parameters | செயற்பாட்டெல்லைகள் |
| Participation | பங்கேற்றல் |
| Performance indicators | செயற்பாட்டுக் குறிக்காட்டிகள் |
| Principles | கோட்பாடுகள் |
| Process | செயல்முறை |
| Project | செயல்திட்டம் |
| Qualifying Norm | தகுதிகாண் விதிமுறை |
| Quality | தரம் |
| Quality Management system | தர முகாமைத்துவ முறை |
| Requirement | தேவைப்பாடு |
| Stakeholders | அக்கறை உடைய தரப்பினர் |
| Standard | நியமம் |
| Strategy | உபாயம் |
| Transparency | வெளிப்படைத்தன்மை |

# *HAP* நியமங்களுக்கான வழிகாட்டி
## மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவம்
## ஆக்கம்: மனிதநேய வகை கூறுதலுக்கான கூட்டிணைவு பங்குடமை
## பதிப்பு : ஒக்ஸ்பாம்

**HAP என்றால் என்ன?**

மனிதநேய வகை கூறுதல் கூட்டிணைவு (HAP) என்பது மனிதநேய செயற்பாடுகளின் தரம் மற்றும் பொறுப்புக் கூறுதலை மேம்படுத்துவதற்கான ஒரு பல் முகவரமைப்பு முன்னெடுப்பாகும்.

**HAP நியமம் என்றால் என்ன?**

HAP மனிதநேய வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவ நியமம் (2007) மனிதநேய வகை கூறுதலுக்கு ஒரு துறைசார் நியமத்தை வழங்குகின்றது. முகவரமைப்பொன்று அவசர நிலைமையொன்றுக்கு பதிலளிக்கையில் எவ்விடயங்களில் கூடுதல் கவனம் கொள்ளுதல் வேண்டுமென்பதன் மீதான பரந்ததொரு கருத்தொருமித்தலை பிரதிபலிக்கிறது.

**HAP நியமம் எவ்வாறு மனிதநேய நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு உதவும்?**

HAP நியமத்தின் ஒரு பகுதி, தன்னார்வத்துடனான சான்றுத் திட்டமாகும். இதனுடன் நியமமும் இணைந்து அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதநேய முகவரமைப்புகள் வகை கூறுதல் உடையதாக இருப்பதற்கு உதவுவதில் ஓர் மேம்பட்ட நிலையைக் காண்பிக்கின்றன.

**இந்த வழிகாட்டி எவ்வாறு உதவும்?**

HAP நியமத்துக்கான வழிகாட்டியுடன் இணைந்துள்ள இறுவட்டு-வாசிப்பு அம்சம் (CD-ROM-feature):

- நியமம் பற்றிய விரிவான விளக்கம்
- சான்று பெறுதலை உறுதிப்படுத்தலுக்கான ஆலோசனை
- அளவுமட்டக் குறிகளை அமுல்படுத்துவதற்கான நடைமுறை உதவி
- சிறந்த செய்முறைகளை அடைவதற்கான ஆலோசனை
- விரிவான உசாத்துணை உதவிகள் மற்றும் மூலவள ஆதாரங்களுக்கான பகுதிகள்
- HAP நியமத்திற்கான முழுமையான உரை வடிவம்

இந்த நடைமுறை வழிகாட்டி, நிறுவனங்களது வகை கூறுதல் மற்றும் தர முகாமைத்துவ முறைகள் மற்றும் HAP சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு எண்ணும் மனிதநேய நிறுவனங்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் தேவையான அனைத்தையும் வழங்குகிறது. அத்துடன், அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் மனிதநேயப் பணிகள் சார்ந்த துறையில் வகை கூறுதல் மற்றும் சிறந்த செய்முறைகளில் ஆர்வம் கொண்ட சர்வதேச அமைப்புகள் என்பவற்றுக்கும் இந்த வழிகாட்டி பயனுள்ளதாக இருக்கும்.

**பொருளடக்கம்**


அறிமுகம்

**பகுதி 1 - HAP நியமத்தின் (2007) தேவைப்பாடுகளைத் திருப்தி செய்தல்**

சான்று பெறுதலுக்கான நியதிகளைத் தகுதியாக்குதல்
மனிதநேய உதவிகளை பாரபட்சமின்றி வழங்குவதற்கான பற்றுறுதி
இலாப நோக்கமற்ற ஸ்தாபனம் என்பதைத் தெரிவிப்பதற்கான முறையான அறிவித்தல்
சட்டத்தின் கீழ் நிதி ரீதியான பொறுப்புக் கூறுதல் உடனான இணக்கப்பாடு
முகவரமைப்பின் மனிதநேய பொறுப்புக் கூறுதலுக்கான செயற்பாட்டு கட்டமைப்பைப் பகிரங்கமாகத் தெரிவிக்கின்ற கூற்று
மனிதநேய வகை கூறுதலுக்கான உடன்படிக்கை
மனிதநேய செயற்பாடுகளுக்கான தத்துவங்கள்
மேலதிக ஆர்வங்களை அறிவித்தல்
மனிதநேயப் பங்காளர்களுடன் பணியாற்றுதல்

**HAP நியமத்திற்கான (2007) அளவுமட்டக் குறிகள்**

அளவுமட்டக் குறி 1: மனிதநேய தர முகாமைத்துவ முறை
அளவுமட்டக் குறி 2: தகவல்
அளவுமட்டக் குறி 3: பயனாளிகள் பங்கேற்றல் மற்றும் விளக்கமளிக்கப்பட்ட சம்மதம்
அளவுமட்டக் குறி 4: தகுதியான காரியாலய ஊழியர்கள்
அளவுமட்டக் குறி 5: முறைப்பாடுகளைக் கையாளுதல்
அளவுமட்டக் குறி 6: தொடர்ச்சியான மேம்படுத்துதல்

**பகுதி 2 - HAP சான்றுக்காக விண்ணப்பித்தல்**

சான்றளிக்கப்படும் கட்டமைப்பு முறைகள்
சான்றளிக்கும் செய்முறைகள்
சான்றளித்தலுக்கான செலவுகள்

**பின்னிணைப்புகள்**

பின்னிணைப்பு 1: HAP நியமத்தின் (2007) முழுமையான வடிவம்
பின்னிணைப்பு 2: சொற்சுருக்கம் மற்றும் கலைச்சொற்கள்
பின்னிணைப்பு 3: செய்கருவிகள்
பின்னிணைப்பு 4: ஏனைய தரம் வகை கூறுதல்


மேலதிக தகவல்களுக்கு::


Oxfam, c/c BEBC Distribution, PO BOX 1496, Parkstone, Poole, Dorset, BH12 3YD, UK
Fax:+44(0) 1202 712933
Email: oxfam@bebc.co.uk
www.oxfam.org.uk/publications

*மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் தொகுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது (CHA)*